# "பட்டினத்தார் பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் வாழ்வியற் சிந்தனைகள்"

**Supervisor**
*Mr. N. Subaraj & Miss. S. Selvakumari ,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. E. Suganya,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

இந்துமதச் சித்தர்களில் ஒருவராக அறியப்படுபவர் பட்டினத்தடிகள். இவரது இலக்கியங்கள் தமிழறிஞர்களால் போற்றப்படுவனவாக சிறந்த இலக்கிய நயமும் மனித வாழ்வியலுக்குத் தேவையான சிந்தனைகளையும் கொண்டுள்ளனவாக உள்ளன. பட்டினத்தார் என்ற பெயருடன் மூவர் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. பதினொராந் திருமுறையில் கண்ட பாடல்களை அருளியவர் ஒருவர். இவர் அருளிய பாடல்கள் 200. இவரது காலம் 10ஆம் நூற்றாண்டாகும். அடுத்தவர் இடைக்காலப் பட்டினத்தார். இவர் அருளிய பாடல்கள் 203. இவரது காலம் 14 ஆம் நூற்றாண்டாகும். அடுத்தவர் பிற்காலப் பட்டினத்தார். இவர் அருளிய பாடல்கள் 246. இவை பதினெண் சித்தர் ஞானக் கோவை என்ற திரட்டு நூலில் சிவவாக்கியார் பாடலை அடுத்து விளங்குவதைக் காணலாம். இவ்வாறு பட்டினத்தார் மூவராகக் காணப்பட்டாலும் இவர்கள் மூவரும் ஒருவரே என்னும் வகையில் இவர்கள் மூவரது பாடல்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

பிரபல்யமான ஒரு நபரின் பெயரை பயன்படுத்துவதன் மூலம் தமக்கும் தமது இலக்கியங்களுக்கும் அங்கீகாரம் கிடைக்கும் என்பதனால் பிற்காலத்தில் பட்டினத்தடிகளின் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இது பற்றிய ஆய்வு தொடர்ந்த வண்ணமே உள்ளது. உண்மையில் இவரது பெயரில் உள்ள பாடல்கள் அனைத்தும் மனித வாழ்விற்கான நீதிச் சிந்தனைகளையும் சமய வாழ்விற்கான நெறிமுறைகளையும் கூறுபனவாகவே உள்ளன. இதனால் இவ்வனைத்துப் பாடல்களுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு விளங்கும் பட்டினத்தாரின் பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் வாழ்வியற் சிந்தனை பற்றி ஆராய்கின்ற ஓர் ஆய்வாக இது அமைகின்றது.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது

1. பட்டினத்தடிகள் பற்றியும் அவரது இலக்கியங்கள் சமூகத்துக்கு கூறும் வாழ்வியற் சிந்தனைகள் பற்றியும் வெளிப்படுத்துதல்.
2. பட்டினத்தார் பாடல்கள் வெளிப்படுத்தும் வாழ்வியற் சிந்தனைகள் தற்கால சமுகத்திற்கு எத்துணை அவசியமாகின்றது என்பதனை ஆராய்தல்

இந்துமதம் சார் தமிழிலக்கியங்களில் பட்டினத்தடிகளின் பாடல்கள் பல்வேறு பரிமாணங்களுடாக இந்து மக்களின் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துபவன. என்பது ஆய்வுப் பிரச்சினையாகும். 'மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை மேற்கொள்ள வேண்டிய நெறிகளையும் ஒழுக்கச் சிந்தனைகளையும் தெளிவுபட பட்டினத்தாரின் பாடல்களில் காணலாம்' என்பது ஆய்வின் கருதுகோளாகும்.

பட்டினத்தார் பாடல்களினூடாக வெளிப்படும் வாழ்வியற் சிந்தனைகளை இன்றைய சமுதாய சீர்திருத்த சிந்தனைகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதற்கு ஒப்பியல் ஆய்வு பயன்படுத்தப்படும். மற்றும் இலக்கிய ஆய்வாகவும் இது அமைகின்றது.

இவ்வாய்வுக்கு பட்டினத்தாரால் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும் பிரதான மூலங்களாக அமையும். பட்டினத்தார் பாடல்கள் தொடர்பான நூல்கள் சஞ்சிகைகள் கட்டுரைகள் வெளியீடுகள் ஆய்வுக் கட்டுரைகள் இணையத்தள கட்டுரைக் குறிப்புகள் என்பன ஆய்வின் உப மூலங்களாக பயன்படுத்த உள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்திலே சிவநேசர், ஞானக்கலம்பை ஆகிய தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் பட்டினத்தடிகள். இவரது பிள்ளைத் திருநாமம் திருவெண்காடர் என்பதாகும். 'பட்டினத்துப் பிள்ளையார் வரலாறு' சரிதத்தின்படி சிவபெருமானின் ஆணைப்படி குபேரனே பட்டினத்தாராக அவதரித்தான் என்பர். இளமையிலே தந்தையாரை இழந்த இவரது கனவிலே ஒரு நாள் சிவபெருமான் தோன்றி திருவெண்காடு செல்லுமாறு ஆற்றுப்படுத்தி ஓர் அந்தணராகி வந்து தாமே அவருக்குத் தீட்சை செய்தருளி வழிபாட்டிற்காக லிங்கம் வழங்கியுதவினார். சிவபூசை மகேசுவரபூசைகள் செய்ததினாலேயே பொருளிழந்த பட்டினத்தாருக்குச் சிவன் கனவிலே தோன்றி அவரது இல்லம் முழுவதும் செல்வம் வழங்கினார். பின் தமது பூசைகளைத் தொடர்ந்த படியே காவிரிப்பூம்பட்டினத்திற்குத் திரும்பிய பட்டினத்தார் பதினாறு வயதில் சிதம்பரச் செட்டியார் சிவகாமியம்மை தம்பதியினரின் புதல்வியாரான சிவகலை என்பவளைத் திருமணம் செய்து சிவத்தொண்டை தொடர்ந்து மேற்கொண்டார் என்பது அவர் பற்றிய சுருக்க வரலாறு.

பட்டினத்துப் பிள்ளையார் அருளிய ஐந்து பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

1. கோயில் நான்மணிமாலை
2. திருக்கழுமல மும்மணிக் கோவை
3. திருவிடை மருதூர் மும்மணிக் கோவை
4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி
5. திருவொற்றியூர் ஒருபா ஒருப..்.து போன்றவை அவையாகும்.

இவையன்றி வேறுபல சிற்றிலக்கியங்களும் தனிப்பாடல்களும் பட்டினத்தார் அருளியனவாக கருதப்படுகின்றன. அவைகூட இலக்கிய வளமும் இலக்கண அமைதியும் பக்திச் சுவையும் அனுபவச் செறிவும் நிரம்பியவையே. அப் பாடல்கள் யாவும் "பட்டினத்தார் பாடல் திரட்டு" என்ற பெயரில் பலரால் உரையோடு அச்சிடப் பெற்றுள்ளன.

இந்துமத இலக்கியங்களில் பட்டினத்தடிகளின் பாடல்களுக்கென தனித்துவமான இடமுண்டு. கற்றார் கல்லாதவர் யாவரும் விரும்பும் இலக்கியங்களுள் பட்டினத்தார் பாடல்களும் ஒரு வகை. இவை கவிதை நயமும் தத்துவச் செறிவும் சமய உண்மைகளும் நிரம்பியவை. கருத்து வளமும் அனுபவ முதிர்ச்சியும் கொண்டதோடு நிரம்பிய எளிமையும் இனிமையும் உடையவை. எனவே கற்பவர் உள்ளத்தை தொட்டு உணர்வைத் தட்டி எழுப்புவனவாய் இவை மிளிர்கின்றன. வேறெந்தப் பாடல்களையும் விடப் பட்டினத்தார் பாடல்கள் சாதாரண மக்களையும் கவர்ந்துள்ளன. நிறைவான வாழ்வியற் சிந்தனைகள் உடைய பாடல்களாகத் திகழ்வதோடு சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடியனவாக இவை உள்ளன.

**திறவுச் சொற்கள் (keywords):** பட்டினத்தடிகள், பாடல்கள், வாழ்வியற் சிந்தனைகள்